**கவனிக்க.**-2023.04.12 ஆந் திகதிய 2328 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) வின் (தமிழ் மொழிமூலப் பிரதி) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2329 - 2023 අප්‍රේල් මස 21 වැනි සිකුරාදා - 2023.04.21

*2329 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 160 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 160 |


**கவனிக்க.**- (i) ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் 2023, மாச்சு மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு சட்டமூலம் 2023, ஏப்பிறல் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி- வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, மே மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023,ஏப்பிறல் மாதம் 28ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

159- B 082447- 353 (2023/04)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

**காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாணம்,குருநாகல் மாவட்டம், கொபெய்கனே பிரதேச செயலகப் பிரிவினது பிரதேச செயலாளர் டபிள்யூ. திலினி நிஸன்சலா சில்வா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1960 ஆம் ஆண்டு ஆளுநரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஆர் 6179 எனும் இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மகா நாகவத்த மொரகஹவெவ வித்திக்குழியவில் வசிக்கும் அர்னஷ்ட் கிறிஸ்தோபர் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டு குருநாகல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 2/44 இன்கீழ் 1960.07.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணியானது அதன் அளிப்பு பத்திரத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் வகையில் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருப்பதால், அந்த அளிப்புப் பத்திரத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை 2023.06.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிருவாக மாவட்டத்தில் கொபெய்கனே பிரதேச செயலக பிரிவில் தேவமெதி ஹத்பத்துவின் பலதொர கோரளையிலுள்ள 1303 வித்திக்குழிய கிராம அலுவலர் பிரிவில் இ.ந.வ. 1570- மொரகஹவெவ எனும் ஊரில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1570 ஆம் இலக்க காணித்துண்டாடல் வரைபடத்தில் / 50,55,57 ஆம் காணித்துண்டுகளாக காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் 24 ஏக்கர், 02 றூட் 32 பேர்ச் விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளையுடைய அரச காணி - மொரகஹவெவமுகாலன.

வடக்கு : இ.ந.வ. 1570 இன் துண்டிலக்கம் 24, 92,63, 62, 61 மற்றும் 58;
கிழக்கு : இ.ந.வ. 1570 இன் துண்டிலக்கம் 63, 62, 61, 56 மற்றும் மெதகம தகய கோரள;
தெற்கு : மெதகம தகய கோரள இ.ந.வ. 1570 இன் துண்டிலக்கம் 28 (ஒதுக்கீட்டுப் பிரதேசமான பாதை) 54,51,26 மற்றும் 52;
மேற்கு : இ.ந.வ. 1570 இன் துண்டிலக்கம் 28 ( ஒதுக்கீட்டு பிரதேசமான பாதை), 54,27,26,51, 52 மற்றும் 24.

திலினி நிஸன்சலா சில்வா,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கொபெய்கனே.
2023.03.02.

04-200

---

# நானவித அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/56732.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : பலாத்/இகோ/இ9/மகு/தீ.ப.05.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில் மஹகும்புக்கடவள பிரதேச செயலக பிரிவிற்குரிய 613, கவயங்குளம் கிராம அலுவலர் பிரிவில் செம்புகுழிய கிராமத்தில் அமைந்துள்ள அரச காணிக்காக அரச உத்தியோகத்தரால் வரையப்பட்ட வரைபடத்தின் மூலம் குறிப்பிடும் 18 ஏக்கர் அளவுடைய விசாலமான அரச காணித்துண்டை விவசாய மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக திரு. ஹிடிஹாமி முதியன்சேலாகே ஞானரத்ன என்பவரால் கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : பாதை ஒதுக்கீடு மற்றும் அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : பாதை ஒதுக்கீடு மற்றும் அரச காணி.

03. கோரியுள்ள காணியை தேவையான விடயத்துக்காக குத்தகைக்குத் தர முடியும். எனவே அரசின் அனுமதித்த வேறு நிபந்தனைகளுக்கு மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக காணியை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) வருடங்கள் (2022.06.30ஆந் திகதியிலிருந் முப்பது வருடம்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட குறையும் பட்சத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மீது அவ்வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட கூடிய சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மீது அவ்வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தஞ் செய்ய வேண்டியதுடன் அது முன்னைய ஐந்து வருட கடைசியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகை தொகைக்கு 20% செலுத்த வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இக் காணியை விவசாய மற்றும் வணிக நடவடிக்கை தவிர வேறெந்த நடவடிக்கைக்கும் ஈடுபடுத்த கூடாது;

(இ) இந்தக் குத்தகையை ஆரம்பித்த ஒரு வருடத்திற்குள் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் /பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் செயற்றிட்டத்துக்குரிய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் வகுத்துள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை அமைய வேண்டும்;

(உ) நிர்மாணித்துள்ள/நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் உரிய அபிவிருத்தி நிலையில் பராமரிக்கப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு கொடுத்துள்ள போது குத்தகையாளர் காணியை பெற்றுக் கொண்டுள்ள விடயத்தை நிறைவேற்ற குறித்த காலப்பகுதியில்' இயலாமல் போகும் போது குத்தகையை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 20232.06.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கடக்கும் வரை இடைக்குத்தகை அல்லது கையளிப்பதற்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை வாடகையை தொடர்ச்சியாக செலுத்தவேண்டியதுடன் குத்தகை பொருட்படுத்தாமல் இருக்கும் சந்தாப்பங்களில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்;

(ஐ) குத்தகை செலுத்துதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைக்காக 10% அபராத வட்டி அறவிடப்படும்.

04. இங்கே கீழ் குறிப்பிடப்படும் திகதி முதல் 06 வாரங்களுக்குள் குறித்த காணியை குத்தகைக்கு வழங்க வேண்டாம் என ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களை எழுதி எனக்கு சமர்ப்பிக்காவிடின் கோரிக்கை படி குத்தகைக்கு வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர்.ஏ.டி.சகுந்தலா
விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.28.

04- 201

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/52513.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : පළාත්/ඉකෝ/ඉ9/මකු/
දී. ඔ. 04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில் மஹகும்புக்கடவள பிரதேச செயலக பிரிவிற்குரிய 613, கவயங்குளம் கிராம அலுவலர் பிரிவில் செம்புகுழிய கிராமத்தில் அமைந்துள்ள, அரச உத்தியோகத்த ரால் வரையப்பட்ட வரைபடத்தின் மூலம் குறிப்பிடும் 28 ஏக்கர் கொண்ட அரச காணித்துண்டை விவசாய வணிக செயற்பாடுகளுக்காக திரு. ஹிடிஹாமி முதியன்சேலாகே தனுஷ்க செனரத் என்பவரால் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : பாதை ஒதுக்கீடு மற்றும் அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : பாதை ஒதுக்கீடு மற்றும் அரச காணி.

03. கோரியுள்ள காணியை தேவையான விடயத்துக்காக குத்தகைக்குத் தர முடியும். எனவே அரசின் அனுமதித்த வேறு நிபந்தனைகளுக்கு மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக காணியை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) வருடங்கள் (2022.06.09ஆந் திகதியிலிருந்து முப்பது வருடம்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட குறையும் பட்சத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மீது அவ்வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட கூடிய சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மீது அவ்வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தஞ் செய்ய வேண்டியதுடன் அது முன்னைய ஐந்து வருட கடைசில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகை தொகைக்கு 20% செலுத்த வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இக் காணியை விவசாய மற்றும் வணிக நடவடிக்கைகள் தவிர வேறெந்த நடவடிக்கைக்கும் ஈடுபடுத்த கூடாது;

(இ) இந்தக் குத்தகையை ஆரம்பித்த ஒரு வருடத்திற்குள் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் /பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் செற்றிட்டத்துக்குரிய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் வகுத்துள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை அமைய வேண்டும்;

(உ) நிர்மாணித்துள்ள/நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் உரிய அபிவிருத்தி நிலையில் பராமரிக்கப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு கொடுத்துள்ள போது குத்தகையாளர் காணியை பெற்றுக் கொண்டுள்ள விடயத்தை நிறைவேற்ற குறித்த காலப்பகுதியில் இயலாமல் போகும் போது குத்தகையை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.06.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கடக்கும் வரை இடைக்குத்தகை அல்லது கையளிப்பதற்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை வாடகையை தொடர்ச்சியாக செலுத்தவேண்டியதுடன் குத்தகை பொருட்படுத்தாமல் இருக்கும் சந்தாப்பங்களில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்;

(ஐ) குத்தகை செலுத்துதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைக்காக 10% அபராத வட்டி அறவிடப்படும்.

04. இங்கு கீழ் குறிப்பிடப்படும் திகதி முதல் 06 வாரங்களுக்குள் குறித்த காணியை குத்தகைக்கு வழங்க வேண்டாம் என ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களை எழுதி எனக்கு சமர்ப்பிக்காவிடின் கோரிக்கை படி குத்தகைக்கு வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர்.ஏ.டி.சகுந்தலா
விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.28.

04- 202

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/ 67854
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: என்சிபி/பிஎல்சிஎல் 02/மனுப/தீகாவ .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இல. 313, மான்கடவல கிராம அலுவலர் பிரிவில் மான்கடவல கிராமத்தில் காணி உத்தியோகத்தரினால் வரையப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 02 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் திரு. மோகன் சுனேந்திர புத்திக்க ஹேகொட ஆராச்சி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : தோன பிரியங்கனீ கரவிட்ட என்பவரின் காணி;
கிழக்கு : அண்டகெட்டியாவ வீதி;
தெற்கு : சீ. அஜித் கரவிட்ட என்பவரின் காணி;
மேற்கு : ஓசந்த நிமேஸ் என்பவரின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது.ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது வருடங்கள் (30) (2022.11.02ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.-** 2022 ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000,00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். 2022 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விடுக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.02 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ.டீ.நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.04.06.

04- 241

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/070430.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: NCP/ PLC/ L02/ MNP/ 4/1.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இத்தால் விடுக்கப்படும் அறிவித்தலாவது, அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத மத்திய பிரதேச செயலகம், இல. 316, தெப்பன்குளம், கிராம அலுவலர் பிரிவு, தெப்பன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள 03 ஏக்கர், 01 றூட், 10பேர்ச் விஸ்தீரணம் கொண்ட ஏ.ஜி.சி. 171 எனும் இலக்க காணி வரைபடத்திலிருந்து பெறப்பட்ட காணித்துண்டு 125 எனக் குறிப்பிடப்படும் காணித்துண்டு இல. 02 என அடையாளப்படுத்தப்படும் காணியை விவசாய நடவடிக்கைகளுக்காக குத்தகைக்குப் பெற திரு. ஹர்ஷஜீவ தர்மப்பிரிய நயனா உஜித் பெர்ணான்டோ என்பவரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : நிமல் எஸ். தயாரத்ன , எச். டி.என்.யு. பெர்ணான்டோ என்பவர்களுக்குச் சொந்தமான காணிகளும் பாதை ஒதுக்குப் பகுதியும்;
கிழக்கு : நிமல் மற்றும் தஹநாயக்கா என்பவர்களுக்குச் சொந்தமான காணிகள்;
தெற்கு : எச்.ஏ. சுனில் மற்றும் தசநாயக்கா என்பவர்களுக்குச் சொந்தமான காணிகள்;
மேற்கு : எஸ். தயாரத்ன , எச்.டி.என்.யு. பெர்ணான்டோ மற்றும் எச்.ஏ. சுனில் என்பவர்களுக்குச் சொந்தமான காணிகளும் பாதை ஒதுக்குப் பகுதியும்.

03. கோரப்பட்டுள்ள காணி குத்தகைக்கு வழங்க முடியும். ஆகையால் அரசாங்கம் அங்கீகரித்துள்ள விதிகள், நிபந்தனைகளின்கீழ் மேற்கூறப்பட்ட காணியை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (2023.01.17ஆந் திகதி தொடக்கம் 2053.01.16ஆந் திகதி முடிவடையும்) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டின் காணியின் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை (ரூபா 5,000,000.00) விடக் குறைவாக இருப்பின், பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கு அமைய காணியின் அபிவிருத்தி குன்றிய பெறுமானம் 2% ஆகும். 2023 ஆம் ஆண்டில் காணியின் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை (ரூபா 5,000,000.00) விட அதிகமாக இருப்பின், பிரதம மதிப்பீட்டாளரின் மதிபீட்டுக்கு அமைய காணியின் அபிவிருத்தி குன்றிய பெறுமானம் 4% ஆகும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு தடவை மாற்றத்திற்கு உள்ளாகுவதோடு முன்னைய 5 வருடங்களின் இறுதியாக அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்தில் 20% சேர்க்கப்படும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்கா காலம் ஆரம்பித்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையுமளவுக்கு குத்தகைக்கு பெற்றவர் காணியை அபிவிருத்தி செய்ய வேண்டும்;

(இ) குத்தகை பெற்றவர் காணியை விவசாய நடவடிக்கைக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டுமே ஒழிய வேறு நடவடிக்கைக்குப் பயன்படுத்தக் கூடாது;

(ஈ) இக்குத்தகை பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களால் விடுக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும் ;

(உ) காணியில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் முறையாக அபிவிருத்தி நோக்கில் நடாத்திச் செல்லப்பட வேண்டும்;

(ஊ) குத்தகை காலப்பகுதியில் எந்த நோக்கத்திற்காக காணி குத்தகைக்கு பெறப்பட்டதோ அந்த நோக்கம் அடையப்படாது விடத்து குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்ய குத்தகைக்காரருக்கு முடியும்;

(எ) 2023.01.17 ஆந் திகதி முதல் 5 வருடங்கள் முடியும் வரை வேறு ஒரு இடையீட்டு குத்தகை மூலம் குத்தகைக்கு வழங்க அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை வாடகை முறையாக செலுத்தப்படுவதோடு அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் உடன்படிக்கை எதேச்சையாக இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்திலிருந்து 6 வார காலப்பகுதிக்குள் குறித்த இடத்தை குத்தகைக்கு வழங்க முடியாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணத்தை தெரிவித்து எனக்கு சமர்ப்பிக்கப்படாத விடத்து கோரிக்கை பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்படும்.

டி.டி.நவோத்யா சி. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.04.11.

04- 242